# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாந்தவணைப் பரீட்சை - 2016

## சைவநெறி

தரம்: 07

2195

சுட்டெண் :..........................................

நேரம்: 2.00 மணித்தியாலம்

### பகுதி - I

❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01) சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள்

1) சிவபெருமான் 2) விநாயகர் 3) முருகன் 4) விஸ்ணு

02) தாயுமான சுவாமிக்கு பூமாலை கட்டிக் கொடுக்கும் தொண்டினைச் செய்தவர்.

1) பரவையார் 2) திலகவதியார் 3) மூதாட்டி 4) ஆண்டாள்

03) இந்துக்களுக்குப் புனிதமான நாள்

1) வியாழன் 2) வெள்ளி 3) ஞாயிறு 4) புதன்

04) மாணவர்களுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் போதிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது.

1) பாடசாலை 2) ஆலயம் 3) அலுவலகம் 4) வீடு

05) "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எனப் பாடியவர்

1) சேக்கிழார் 2) அருணகிரிநாதர்
3) திருஞானசம்பந்தர் 4) கச்சியப்ப சிவாச்சாரியார்

06) பசுவிற்கு நீதி வழங்குவதற்காகத் தன் மகனையே தேரேற்றிக் கொன்ற மன்னன்

1) சிபிச்சக்கரவர்த்தி 2) மனுநீதிச் சோழன்
3) தசரதச் சக்கரவர்த்தி 4) கச்சியப்ப சிவாச்சாரியார்

07) தேவாரத் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட இடம்

1) திருநாரையூர் 2) திருவண்ணாமலை
3) திருமறைக்காடு 4) தில்லை

08) கொலு வைத்து வழிபாடு செய்யப்படும் விரதம்

1) சிவராத்திரி 2) கந்தசஷ்டி 3) சதுர்த்தி 4) நவராத்திரி

09) ஏகநாதர் கதை மூலம் வெளிப்படுத்தப்படும் பிரதான விழுமியப் பண்பு

1) வாய்மை 2) சகோதரத்துவம் 3) பொறுமை 4) ஒற்றுமை

10) திருச்சிராப்பள்ளியையும், திருவானைக்காவையும் பிரிக்கும் ஆறு

1) காவிரி 2) வைகை 3) கங்கை 4) ஜமுனை

11) வீடு குடிபுகுதலின் போது இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளுள் ஒன்று

1) கஞ்சி காய்ச்சுதல் 2) பால் காய்ச்சுதல்
3) கூழ் காய்ச்சுதல் 4) சோறு சமைத்தல்

12) பஞ்சபுராணம் ஓதும்போது இரண்டாவதாக ஓதப்படுவது

1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) பெரியபுராணம்



kalvi.lk

13) கலைகளைக் கற்கத் தொடங்குவதற்கு உகந்த நாள்

1) ஆவணி ஞாயிறு 2) ஆடிப் பூரம்

3) விஜய தசமி 4) சித்திரைப் பௌர்ணமி

14) வேடுவனையும் தன் சகோதரனாகக் கருதிய அரசன்

1) இராமன் 2) அரிச்சந்திரன் 3) தசரதன் 4) பரதன்

15) சமய குரவர்களுள் ஒருவர்

1) ஆறுமுகநாவலர் 2) சுவாமி விபுலானந்தர்

3) சுவாமி விவேகானந்தர் 4) மாணிக்கவாசக சுவாமிகள்

16) பண்டைக்காலத்தில் கல்வி போதிக்கப்பட்ட இடம்

1) பாடசாலை 2) ஆலயம் நகுலம் 4) வீடு

17) அரச வம்சத்தில் பிறந்தும் தேரோட்டியின் மகனாக வளர்ந்தவன்

1) கர்ணன் 2) தருமன் 3) அருச்சுனன் 4) வீமன்

18) புதுமனை புகும் நிகழ்வின்போது சிவாசாரியாரினால் நிகழ்த்தப்படும் கிரியைகளுள் ஒன்று

1) கிராம சாந்தி 2) கிருக சாந்தி 3) வைரவர் சாந்தி 4) ஆத்ம சாந்தி

19) திருஞான சம்பந்தர் திருக்கோணேச்சரத்தின் மீது பாடிய தேவாரப் பாடல்

1) "நிரைகழலரவம்....." 2) "விருது குன்றமா....."

3) இடரினுந் தளரினும்...." 4) "தோடுடைய செவியன்....."

20) "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறியவர்.

1) திருநாவுக்கரசர் 2) சுந்தரமூர்த்தி நாயனார்

3) சேர். பொன். இராமநாதன் 4) காரைக்காலம்மையார்

(20x2= 40புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) பின்வரும் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமாகப் பிழையின்றி எழுதுக.

1) நிரைகழலரவம்....."

2) "விருது குன்றமா....."

3) "மாதர் பிறைக்கண்ணி...."

4) "நங்கடம்பனைப் ....."

(10+10=20புள்ளிகள்)

(02) "இறைவன் தந்தையாகவும் தாயாகவும் விளங்குகின்றார்"

1) மூதாட்டியின் மகளுக்குப் பிரசவம் பார்த்தவர் யார்?

2) வீடு திரும்ப முடியாது இருந்த மூதாட்டி யாரிடம் உதவி கேட்டார்?

3) மூதாட்டியின் மகள் பெற்ற பேறு யாது?

4) சைவ மக்களிடையே காணப்படும் கடவுள் பற்றிய நம்பிக்கைகள் மூன்றினை எழுதுக.

(2+2+3+3=10புள்ளிகள்)



kalvi.lk

(03) “சமய ஒழுங்குகளையும் சைவப் பாரம்பரியங்களையும் கற்றுக்கொடுக்கும் இடமாகப் பாடசாலை விளங்குகிறது”

1) பாடசாலையில் நடைபெறும் சமய விழாக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2) பாடசாலையில் சமய விழாக்களை நடத்துவதன் மூலம் மாணவர் பெறும் நன்மைகள் இரண்டினை எழுதுக.
3) திருமுறை ஓதமுன்பும், ஓதிய பின்பும், திருச்சிற்றம்பலம் சொல்லப்படுவதற்கான காரணம் யாது?
4) நீர் எவ்வாறு பாடசாலைக்குச் சமூகமளிப்பீர்?

(2+2+3+3=10 புள்ளிகள்)

(04) “தூய்மையும் அன்பும் நிறைந்த இடத்தில் இறைவன் குடிகொள்வான்”

1) நீர் ஆசிரியருக்கு எவ்வாறு மதிப்பளிப்பீர்?
2) பாடசாலையில் நீர் நிறைவேற்றும் கடமைகள் எவை?
3) பாடசாலை நிறைவுறும் வேளையில் நீர் எவ்வாறு நடந்து கொள்வீர்?
4) பாடசாலையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் எவை?

(2+2+3+3=10புள்ளிகள்)

(05) “மனிதனை மனிதனாக வாழ வைப்பன வாழ்வியல் நற்பண்புகள் ஆகும்”

1) மனுநீதி கண்ட சோழன் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?
2) குந்தியின் மகனான கர்ணனை வளர்த்தவர்கள் யாவர்?
3) உம்மிடம் உள் நற்பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.
4) செய்ந்நன்றி மறவாமையை வலியுறுத்தும் வாசகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

Education கல்வி அධ්‍යාපන

(2+2+3+3=10புள்ளிகள்)

06) “வாழ்வியல் சடங்குகள் மனிதனது வாழ்வை வளம் படுத்துகின்றன”

1) புதுமனை கட்டும் முறையினைக் கூறும் நூல் எது?
2) புதுமனை புகுவதற்கு முதல் நாள் வீட்டில் பசுவைத் தங்க வைப்பதற்கான காரணம் யாது?
3) புதுமனை புகும் தினத்தன்று கோயிலில் இருந்து புதுமனைக்கு எடுத்து வரப்படும் பொருட்கள் எவை?
4) அத்திபாத்தித்தினுள் இடப்படும் புனித மண் வகைகள் பெறப்படும் இடங்கள் எவை?

07) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) பணிவு　　2) நவராத்திரி　　3) கர்ணன்
4) பொறுமை　　5) தாயுமானசுவாமி

(2+2+3+3=10பு ள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

## கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457